தமிழ் இணையக் கல்விக்கழகம்
**TAMIL VIRTUAL ACADEMY**

மேற்சான்றிதழ்க் கல்வி (Higher Certificate Course)
**HG30** - நிலை 3 - **(Grade 3)**

நேரடி எழுத்துத் தேர்வு (Offline Examination)

மே, சூன் – 2016

நேரம் : 2.30 மணி மதிப்பெண் : 75

பிரிவு - 1

**I** **எல்லா வினாக்களுக்கும் ஒரு சொல் / தொடரில் விடை தருக.**
Answer all questions in a word / line. **(10 x 1 = 10)**

1. 'நீதி நாயகர்' என மக்களால் போற்றப் பெற்றவர் யார்?
2. திருக்குறளில் எத்தனை அதிகாரங்கள் உள்ளன?
3. முத்தமிழ்க் காப்பியம் என்று அழைக்கப் பெறுவது எது?
4. பாரதியார் பிறந்த ஊர் எது?
5. முதல் முதலில் நூல் தோற்றம் பெற்ற மொழி எது?
6. உலகில் மிகப் பெரிய ஆறு எது?
7. பறவையைக் கண்டான் விமானம் படைத்தான் என்பது யாருடைய கவிதை அடி?
8. விடை எத்தனை வகைப்படும்?
9. பாக்கள் எத்தனை வகைப்படும்?
10. புறத்திணைகள் எத்தனை வகைப்படும்?

பிரிவு - 2

**II** **எவையேனும் பத்து வினாக்களுக்கு ஒவ்வொன்றிற்கும் மூன்று வரிகளில் விடை தருக.**
Answer any ten questions in three lines each. **(10x2=20)**

1. ஐம்பூதங்கள் கடவுளை எவ்வாறு வணங்குகின்றன?
2. வாழும் உயிர்களுக்கு ஊதியமாவது எது?
3. முத்தமிழ்க் காப்பியம் எனப் போற்றப்பெறுவது எது? ஏன்?
4. மழை பெய்வதற்குரிய அறிகுறிகள் யாவை?
5. அனைத்து உயிரும் எவ்வாறு இருக்க வேண்டும் என்று சாலை இளந்திரையன் கூறுகிறார்?
6. இறைவன் எப்படி உள்ளான் என்று உமறுப்புலவர் கூறுகிறார்?
7. தமிழில் உள்ள காவியங்கள் சிலவற்றைக் கூறுக.
8. மணியின் தொல்லை பொறுக்காத ஆசிரியர் என்ன செய்தார்?
9. காவிரி ஆறு தமிழகத்தின் எப்பகுதிகளை வளப்படுத்துகிறது?
10. குற்றாலத்தில் உள்ள சிறப்புகள் யாவை?
11. வலவன் ஏவா வான ஊர்தி என்றால் என்ன?
12. மூவேந்தர்கள் என்று அழைக்கப் பெறுபவர்கள் யாவர்?

13. சொல் என்றால் என்ன?
14. அகப்பொருள் என்றால் என்ன?
15. இருவகை வாக்கியங்கள் எவை?

## பிரிவு - 3

**III எவையேனும் ஐந்து வினாக்களுக்கு ஒவ்வொன்றிற்கும் ஆறு வரிகளில் விடை தருக.**
Answer any five questions in six sentences each. **(5x4=20)**

1. அனைத்து உயிர்களும், ஐம்பூதங்கள் எந்தெந்த தொழில்கள் செய்து இறைவனை வணங்குவதாக வேதநாயகம் பிள்ளை கூறுகின்றார்?
2. எந்தெந்த பொருள்களை மகளிர் ஏந்தி கண்ணகியை மங்கல அமளியாகிய படுக்கையில் ஏற்றினர்?
3. பெண் கல்வி குறித்து பாரதிதாசன் கூறுவன யாவை?
4. தமிழ் மொழியின் பெருமைகளைப் பாவாணர் வழியில் ஏதேனும் ஐந்தினை மட்டும் எழுதுக.
5. குற்றாலத்தின் சிறப்புகளில் ஏதேனும் ஐந்தினை எழுதுக.
6. வளவன் வான ஊர்தி நிலையத்தில் எந்தெந்தப் பகுதிகளையெல்லாம் கவனித்துக் கொண்டே வந்தான்?
7. வினா எத்தனை வகைப்படும்? அவை யாவை?
8. சொற்பொருட் பின்வருநிலை அணியை விளக்குக.

## பிரிவு - 4

**IV ஏதேனும் ஒன்றனுக்குப் பதினைந்து வரிகளில் விடை தருக.**
Answer any one of the following questions in fifteen sentences. **(1x10=10)**

1. புகழ் என்னும் அதிகாரத்தில் திருவள்ளுவர் கூறும் கருத்துகளைத் தொகுத்தெழுதுக.
2. இளையவன் இவனா? என்ற உரைநடையின் மையக்கருத்தினை எழுதுக.
3. தமிழ்மொழியின் சிறப்புகளாக நீவிர் அறிந்தவற்றை எழுதுக.

## பிரிவு - 5

**V ஏதேனும் ஒன்றனுக்கு மூன்று பக்கக் கட்டுரை வடிவில் விடை தருக.**
Write an essay in three pages to any one of the questions. **(1x15=15)**

1. குற்றாலம் என்ற ஊரின் இயற்கை வளங்களைப் பற்றி ஒரு கட்டுரை வரைக.
2. மணி கண்ட கனவுக் கதையைச் சுருக்கி எழுதுக.

□□□□